**சுனாமிக்குப் பிந்திய கரையோரப் புனரமைப்பு மற்றும் வளங்கள் முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டம் - 2014**

---

சுனாமிக்குப் பிந்திய கரையோரப் புனரமைப்பு மற்றும் வளங்கள் முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டத்தின் 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு, இலங்கை சனநாயக சோசலிச குடியரசிற்கும் (ஜீஓஎஸ்எல்) விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியத்திற்கும் (ஐஎவ்ஏடி) இடையில் கைச்சாத்திடப்பட்ட 2005 திசெம்பர் 01 ஆந்திகதிய 664 – எல்கே ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் V ஆம் உறுப்புரையின் 5.02 (அ) ஆம் பிரிவு மற்றும் 2008 ஏப்ரல் 18 ஆந்திகதிய 693 – எல்கே ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் V ஆம் உறுப்புரையின் 3.01 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

## 1.2 செயற்திட்டத்தின் நிறைவேற்றல், குறிக்கோள்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி என்பன

---

நிகழ்ச்சித்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின்படி, கடற்றொழில், நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சு நிகழ்ச்சித்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது. சுனாமியால் பாதிக்கப்பட்ட குடும்பங்களிற்கு அத்தியாவசிய சமூக மற்றும் பொருளாதார உட்கட்டமைப்புக்களை குறிப்பாக வீடமைத்தலும் வழங்குதலுடன் சுனாமியால் பாதிக்கப்பட்ட சமூகங்களை வலுப்படுத்துவதுடன் கரையோர வளங்களை நிலைபேறாக முகாமைத்துவம் செய்தல் மற்றும் சமூக மற்றும் பொருளாதார நடவடிக்கைகளில் பெண்களின் பங்குபற்றலை அதிகரித்தல் என்பன நிகழ்ச்சித்திட்டத்தின் குறிக்கோள்களாக உள்ளன. கடன் உடன்படிக்கையின்படி, நிகழ்ச்சித்திட்டத்தின் மொத்த மதிப்பிடப்பட்ட கிரயம் ஐ.அ.டொலர் 36.14 மில்லியனானதுடன் அதில் ரூபா 3,386.8 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 31.35 மில்லியன் அல்லது 86.7 சதவீதம் விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியத்தால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது. நிகழ்ச்சித்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2006 மார்ச் 06 இல் தொடங்கியிருந்ததுடன் 2014 மார்ச் 31 இல் கடன் காலம் முடிவடைந்துள்ளது. செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் 2014 ஏப்ரல் 30 வரை தொடர்ந்திருந்ததுடன் 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந் நிதிக்கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களில் இருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் தீர்மானிக்கும் அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகளிற்கும் முகாமைத்துவம் பொறுப்பாகும்.

## 1.4. கணக்காய்வாரின் பொறுப்பு

---

என்னுடைய கணக்காய்வுப் பரிசோதனையை அடிப்படையாகக் கொண்டு இந்நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இவ்வறிக்கையிலுள்ள கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள் மற்றும் காண்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல்வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள்

என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தைக் கொண்டதாக இருந்தது. நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்ளத்தக்க வகையில் கணக்காய்வானது இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு அமைய மேற்கொள்ளப்பட்டது. நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினதும், வெளிப்படுத்தல்களினதும் ஆதாரத்திற்கான சான்றுகளின் பரிசோதனை, நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கையில் முகாமைத்துவத்தினால் கடைப்பிடிக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளையும் குறிப்பிடத்தக்க மதீப்பீடுகளினையும் அவற்றின் ஒட்டுமொத்த முன்வைத்தலையும் மதிப்பாய்வு செய்தல் என்பவற்றை கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு நோக்கத்திற்கு அவசியமானவை என எனது உயர் அறிவிற்கும் நம்பிக்கைக்குமேற்ப போதிய தகவல்கள் மற்றும் விளக்கங்களை நான் பெற்றுக்கொண்டேன் ஆகையினால் எனது அபிப்பிராயத்திற்கான நியாயமான அடிப்படையை எனது கணக்காய்வு வழங்கியதென நான் நம்புகின்றேன். அந்தப் பரிசோதனையில் பின்வருவனவற்றை மதிப்பீடு செய்வதற்கு அவசியமானதென தென்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள், கொடுக்கல் வாங்கல்கள், சொத்துக்கள், பொறுப்புக்கள் மற்றும் கணக்குப் பதிவேடுகள் என்பவற்றின் அத்தகைய செவ்வைகளும் உள்ளடக்கப்பட்டிருந்தன.

(அ) நிகழ்ச்சித்திட்டத்தின் முகாமைத்துவம் தொடர்பாகத் திருப்திகரமான கட்டுப்பாட்டையும் நிகழ்ச்சித்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பகத் தன்மையையும் உறுதி செய்வதன் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவாக இருந்தனவா என்பதும்,

(ஆ) நிகழ்ச்சித்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட செலவினம் நிகழ்ச்சித்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் முன்னேற்ற அறிக்கைகள் என்பவற்றுக்கிணங்க திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன் வழங்கும் முகவரின் நிதிகளிலிருந்தான நிகழ்ச்சித்திட்டத்தின் செலவினம், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் நிகழ்ச்சித்திட்டத்தின் முன்னேற்றம், நிகழ்ச்சித்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து எழுந்த சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்தான கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைக் காட்டக்கூடியவாறு தொடர்ச்சியான அடிப்படையில் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட அளவீடுகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(உ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள், மற்றும், உபகரணங்கள் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஊ) நிகழ்ச்சித்திட்டத்தின் அமுலாக்கலுக்காகக் கடைபிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) நிதிக்கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) விசேட (டொலர்) கணக்கிற்கான ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள், அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள் நிரப்பல்கள் என்பன நிகழ்ச்சித்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தனவா என்பதுடன் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் (சீபீஎஸ்எல்) கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்ததா என்பதும்

(ஐ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஎஸ்) மீது கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கிணங்க மீளளிப்புக்களுக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவை என நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடிந்திருந்தனவா என்பதும்,

(ஒ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஓ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதி கட்டுப்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1. அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் நான் பெற்றுக்கொண்ட தகவல்களுக்கும் மற்றும் எனக்கு அளிக்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய,

(அ) நிகழ்ச்சித்திட்டமானது 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளை பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிகழ்ச்சித்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தருகின்றது என்றும்,

(ஆ) எந்த நோக்கங்களுக்காக நிதி ஏற்பாடு செய்யப்பட்டனவோ அந்த நோக்கங்களுக்காகவே அவை பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்

(இ) 2014 திசெம்பர் 31 இறுதியாண்டின் போது விசேட கணக்கிற்கான ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள், அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள் நிரப்பல்கள் என்பன நிகழ்ச்சித்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தனவா என்பதுடன் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை

மத்திய வங்கியின் (சீபீஎஸ்எல்) கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்ததன என்றும்,

(ஈ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஎஸ்) மீது கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கிணங்க மீளளிப்புக்களுக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவை என நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடியுமென்றும்,

(உ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான அளவீடுகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

(ஊ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதி கட்டுப்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும் நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 2.2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

கடன் உடன்படிக்கையின் 05.01 ஆம் உட்பிரிவின் பிரகாரம், நிதியாண்டு முடிவடைந்த பின்னர் 03 மாதங்களிற்குள் நிகழ்ச்சித்திட்டத்தின் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்தது. எவ்வாறாயினும் 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 சனவரி 26 இலேயே கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

## 3. நிதி மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிப் பயன்பாடு

மீளாய்வாண்டிற்கான நிதியளிப்பு, பாதீட்டு ஏற்பாடு மீளாய்வாண்டின் போது மற்றும் 2014 திசெம்பர் 31 வரையான நிதிகளின் பயன்பாடு என்பன தொடர்பான முக்கியமான சில புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| மூலங்கள் | கடன் உடன்படிக்கையின் பிரகாரம் நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை | | 2014 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு | நிதிகளின் பயன்பாடு | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | 2014 ஆம் ஆண்டின் போது | 2014 திசெம்பர் 31 வரை | |
| | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் |
| ஐஎவ்ஏடி | 31.35 | 3,386.81 | 27.20 | 26.45 | 31.05 | 3,741.34 |
| இலங்கை அரசாங்கம் | 4.37 | 471.96 | 5.00 | 2.30 | 1.46 | 157.19 |
| நலனாளிகள் பங்களிப்பு | 0.42 | 45.67 | - | | 0.19 | 20.78 |
| மொத்தம் | 36.14 | 3,904.44 | 32.20 | 28.75 | 32.70 | 3,919.31 |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சில நடவடிக்கைகளில் ஏற்பட்ட உள்ளபடியாக கிரயம் அவற்றின் மீது செய்யப்பட்ட ஒதுக்கீடுகளை கருத்திற்கொள்ளக்கூடியளவு விஞ்சியிருந்தது அதேநேரம், நிகழ்ச்சித்திட்டத்தின் வேறுநடவடிக்கைகளிற்காக அந்த மிகைகளை தொடர்புபடுத்தப்படுகின்றன என அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும், அத்தகைய ஒதுக்கீட்டு மாற்றங்களிற்காக கடனளிக்கும் முகவரிடமிருந்து உரிய அங்கீகாரம் கணக்காய்விற்கு கிடைத்திருக்கவில்லை. அந்த மிகைகளின் விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| கூறு | ஒதுக்கப்பட்ட நிதிகள் | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிகளின் பயன்பாடு | ஒதுக்கீட்டிற்கு மேலான மிகைகள் | மிகைகளின் சதவீதம் |
|---|---|---|---|---|
| | ஐ.அ.டொலர் | ஐ.அ.டொலர் | ஐ.அ.டொலர் | |
| சிவில் வேலைகள் | 19,647,750 | 22,420,120 | 2,772,370 | 14.11 |
| சேவை வழங்குநருடனான ஒப்பந்தங்கள் | 462,300 | 832,081 | 369,781 | 79.98 |
| சம்பளங்கள் மற்றும் படிகள் | 1,849,200 | 2,154,516 | 305,316 | 16.51 |

(ஆ) மகளீருக்கான சிறு தொழில் முயற்சிகளிற்கான திருப்பி செலுத்த தேவையற்ற மானியங்களிற்காக கடன் இலக்கங்கள் 664 எல்கே என்பவற்றின் கீழ் ஒதுக்கப்பட்ட நிதிகளில், ஒதுக்கீட்டின் முறையே 68 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ஐ.அ.டொலர் 470,548 மற்றும் 5 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ஐ.அ.டொலர் 99,481 மாத்திரமே நிகழ்ச்சித்திட்டத்தால் பயன்படுத்தப்பட்டிருந்தது.

## 3.2 பௌதீக செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயற்திட்ட பூர்த்தியாக்கல் அறிக்கையின் பிரகாரம், நிகழ்ச்சித்திட்டத்தின் சமூக பொருளாதார உட்கட்டமைப்பு கூறின் கீழ் அமுலாக்கப்படட்ட 07 நடவடிக்கைகளின் கீழான பௌதீக முன்னேற்றம் நிகழ்ச்சித்திட்டத்தின் இறுதியில் 33 சதவீதத்திலிருந்து 84 சதவீதம் வரையான வீச்சில் இருந்தது.

(ஆ) நிகழ்ச்சித்திட்டத்தின் நிலைபேறாக முகாமைசெய்கின்ற கடற்கரை வளக் கூறின் நோக்கங்களை அடைவதற்கு திட்டங்கள் தயாரிக்கப்பட்டு அமுலாக்கப்பட்டிருக்கவில்லை.